TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 JUL 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1972 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Strike by Plantation Workers

* 4 S. N. Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether one lakh plantation workers in the Nilgiris and Anamalais propose to go on strike;

(*b*) if so, what are their demands; and

(*c*) what steps have been taken to meet their demands?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) ஊதியங்கள், ஊதியக்கொடை, பணிக்கொடை, பணியில் நிரந்தரமாக்குதல், விடுமுறை நாட்களுக்கு ஊதியங்கள், தேநீர், விறகு ஆகியவற்றை இலவசமாக வழங்குதல், ஊதியங்களுடன் கூடிய விடுப்பு, மருத்துவ வசதிகள், வாழ்க்கைப்படி, ஊக்கத் தொகை, மழைக்கோட்டு வழங்குதல், வீட்டு வசதிகள், மற்றும் ஏனைய சில கோரிக்கைகளை தொழிலாளர்கள் விடுத்தனர்.

(உ) கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், இத்தகராறை இணக்கமாகத் தீர்ப்பதற்கென தகராறுக்குத் தொடர்புடைய தரப்பினருடன் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தினர். மேற்கொண்டும் இன்று (28—3—72) பேச்சு வார்த்தைகள் நடந்துவருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆனைமலையில் இருக்கக்கூடிய ஏ.ஐ.டி.யு.சி-யும் நீலகிரியில் இருக்கக்கூடிய ஐ.என்.டி.யு.சி-யும் தொழிலாளிகள் மத்தியில் பெருவாரியாக அங்கம் வகிக்கக்கூடிய

சங்கங்களாக இருக்கின்றன. ஆகவே, எந்த ஒப்பந்தம் ஏற்பட்டாலுங்கூட அந்த இரு சங்கங்களைக் கலந்தே எடுக்கக்கூடிய அளவுக்கு அரசு டெபுடி லேபர் கமிஷனருக்கு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த யோசனையும் டெபுடி லேபர் கமிஷனருக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : குறிப்பாக, தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துகின்ற போது ஏதாவது போனஸ் கட்டம் வந்தவுடனே, போனஸ் ஒப்பந்தம் மட்டும் ஏற்பட்டுவிடுகிறது. அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டாலுங்கூட, மீண்டும் இதேமாதிரியாக ஊதியப் பிரச்சினை யெல்லாம் வருகிறது. ஆகவே, இந்த முறை முடிந்தால் அங்கு மத்தியில் இருக்கக்கூடிய லேபர் கமிஷனர் போன்றவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்து அனுப்பி அதை செட்டில் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இன்றையதினம் நடைபெறும் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியாவிட்டால் அடுத்து லேபர் கமிஷனர் மூலமாகப் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று, ஓவர்டைம் வேலைசெய்தால் கிலோ ஒன்றுக்கு ஆறணா கொடுக்கவேண்டும் என்பதாகும். ஆனால், இப்பொழுது இரண்டரையணாதான் கொடுக்கப்படுகிறது. பக்கத்திலுள்ள கேரள மாநிலத்தில் கிலோ ஒன்றுக்கு ஒன்பதணா கொடுக்கப்படுவதால், நாம் ஆறணா வீதம் கொடுப்பது நியாயமாக இருக்குமாதலால் அதை அமலாக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பேச்சுவார்த்தையின் போது இவையெல்லாம் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தக் கோரிக்கைகள் அனைத்தும் தமிழ் நாடு ப்ளாண்டேஷன் லேபர் அட்வைசரி போர்டில் முடிவு செய்யப்பட்டவைகளாகும். இவற்றை நிர்வாகிகள் நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, மீண்டும் நிர்வாகிகள் இவற்றை மீறுவது என்றால், அரசாங்கம் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கும் ?

1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : முதலாளிகள் மீறினுல் அப்பொழுது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி அரசு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 739, 740 ஆகிய எண்கள் உள்ள இரு விஞக்களும் ஒன்ருக எடுத்துக்கொள்ளப்படும்.

Youth Corps.

* 739 *Q.*—THIRU K. T. K. THANGAMANI :
THIRU N. KITTAPPA :
THIRU K. KALIMUTHU : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Youth Corps proposed by the Government has been formed; and

(*b*) if so, the number of educated youths appointed as on this date district-wise?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ)	நியமன உத்தரவு அனுப்பப்பட்டவர்கள்.	பயிற்சியில் சேர்ந்தவர்கள்.
ஆண் தொண்டர்கள்	1,800	1,643
பெண் தொண்டர்கள்	200	193
மொத்தம்	2,000	1,836

மாவட்டவாரி ஒதுக்கீடு

மாவட்டங்கள்.	ஆண்.	பெண்.
சென்னை	156	30
செங்கற்பட்டு	95	10
தென்ஞர்காடு	95	10
வட ஆர்க்காடு	95	10
மதுரை	190	20
திருச்சிராப்பள்ளி	190	20

TRUTH ALONE TRIUMPHS